## 4 அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு மற்றும் தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவினை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (2) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1975-ம் ஆண்டு இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இது அரசியலமைப்புச் சட்ட 199—வது பிரிவுப்படி பணச் சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன் :—

(1) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, பந்தய (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1975).

(2) தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 53/1972).

(3) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1974).

(4) தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1974).

(5) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள் சிறு இனாம்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974).

(6) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1975).